செ.வெ.எண்:29 நாள்:23.03.2019

நாகப்பட்டினம் மாவட்டம்

**நடைபெறவிருக்கும் 2019 மக்களவை தேர்தலையொட்டி சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை அனுப்பிட ஏதுவாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான முதல் சுழற்சிமுறை நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2019 மக்களவை தேர்தலையொட்டி சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை அனுப்பிட ஏதுவாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான முதல் சுழற்சிமுறை நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உட்பட்ட 6 சட்ட மன்ற தொகுதியில் சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 288 வாக்குசாவடிகளும், 161 மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 266 வாக்குசாவடிகளும், பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் 306 வாக்குசாவடிகளும், நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதியில் 221 வாக்குசாவடிகளும், கீழ்வேளுர் சட்டமன்ற தொகுதியில் 203 வாக்குசாவடிகளும், வேதாரண்யம் சட்டமன்ற தொகுதியில் 227 வாக்குசாவடிகளும் ஆக நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதிக்கு 1511 வாக்குச் சாவடிகள் உள்ளன. மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் காவல் துறையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. முதல் நிலை சுழற்சி முறையில் ஒவ்வொரு பெட்டியிலும் 10 மின்னணு வாக்குப் பதிவு உள்ளடங்கி உள்ளன. தற்பொழுது அதனை பிரித்து வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சுழற்சி முறை குறித்தும், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் எந்தெந்த மின்னணு வாக்குப் பெட்டிகள் செல்கின்றன என்பது குறித்த விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருதி.மு.இந்துமதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.பத்ரிநாத், வட்டாட்சியர்(தேர்தல்) திரு.ராஜகோபால், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**